கூடுதல் மாவட்டட நீதிமன்றம், (விரைவு நீதிமன்றம் ) விழுப்புரம்.

முன்னிலை = திரு.எம். செங்கமலச்செல்வன், பி.எல்.,

கூடுதல் மாவட்ட நீதிபதி ( விரைவு நீதிமன்றம் )

விழுப்புரம்.

2021ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 14ம் நாள் செவ்வாய்கிழமை

**வழக்கிடை மனு எண். 4/2020**

**இன்**

**மேல்முறையீட்டு வழக்கு எண். 15 /2016**

துளசிங்கம் .. மனுதாரர் /4வது மேல்முறையீட்டாளர்/ 4ம் பிரதிவாதி

/எதிர்/

விழுப்புரம், தமிழ்நாடு மின்சார வாரிய பணியாளர்கள் கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் சார்பாக அதன் தலைவர் பன்னீர் செல்வம் .... எதிர்மனுதாரர் / மேல்முறையீட்டாளர்/ வாதி

இம்மனு 27.08.2021 அன்று இறுதி விசாரணைக்கு என் முன் வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.வி.ஜி.துளசிங்கம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.நடராஜன் அவர்கள் ஆஜராகியும் இருதரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்கள் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்............

**உத்தரவு**

மனுதாரர் / பிரதிவாதி தரப்பில், எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள மேல்முறையீட்டு மனுவை விசாரணை ஏதுமின்றி நிராகரித்து (Rejection or dismissal of appeal) தள்ளுபடி செய்து உத்தரவு செய்ய வேண்டி ஆர்டர் 3 ரூல் 1 மற்றும் 2 சிபிசி உ/இ பிரிவு 20 தமிழ்நாடு சங்க பதிவு சட்டம் மற்றும் உ/இ பிரிவு 151 சிபிசி மனுவை அனுமதித்து உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) <u>மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாண பத்திரிக்கையின் சுருக்கம்</u> =**

மனுதாரா், மேல்முறையீட்டு வழக்கில் 4வது எதிா்மனுதாரா், அசல் தாவாவில் 4ம் பிரதிவாதி என்றும், எதிா்மனுதாரா், வாதியாக இருந்து விளம்புகை மற்றும் செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி விழுப்புரம், இரண்டாவது கூடுதல் சாா்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அ.வ.105/2000 வழக்கு இருதரப்பு விசாரணைக்கு பின்னா் 30.11.2015ல் தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்படி தீா்ப்பின் பேரில், எதிா்மனுதாரா் கனம் நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு ஏ.எஸ்.15/2016 மனு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது. மனுதாரா் ஆரம்ப முதலே விசாரணை நீதிமன்றத்திலும், மேல்முறையிட்டிலும் வாதிக்கு இந்த தாவாவை தாக்கல் செய்ய உரிமையே இல்லை என்றும், அப்படி ஒரு வாதியே இலலை என்றும் மறுப்பு தெரிவித்துள்ளதாகவும், இந்த கூற்றை 4ம் பிரதிவாதியின் குறுக்கு விசாரணையில் வாதியே ஒப்புக்கொண்டுள்ளதாகவும், எதிா்மனுதாரா் பெயரில் தற்போது எந்த சங்கமும் செயல்படவில்லை என்றும், மேற்படி பன்னீா் செல்வம் என்பவா் தனிப்பட்ட ஆதாயத்திற்காக சங்கத்தின் அப்போதைய தலைவா் எனறு கூறிக்கொண்டு மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளாா். பன்னீா் செல்வம் என்பவருக்கு மேல்முறையீட்டு தாக்கல் செய்ய அங்கீகாரம் அளித்து, சங்கத்தின் தீா்மானம் இயற்றப்பட்டதாக ஆவணம் எதுவும் மேல்முறையீட்டு மனுவுடன் தாக்கல செய்யவில்லை. எனவே தகுதியில்லாத நபரால் தாக்கல் செய்ப்பட்ட மேல்முறையீட்டு வழக்கை விசாரணை ஏதுமின்றி நிராகரிக்கப்பட்டு (Rejection or dismissal of appeal) தள்ளுபடி செய்ய வேண்டியது சட்டப்படியும் நியாயப்படியும் அவசியமாதாகும்.

**3) <u>எதிர்மனுதாரா் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்சேபணையின் சுருக்கம்</u> =**

மனுதாரரின் மனு சட்டப்படி சரியல்ல. எதிா்மனுதாரரின் சங்க பதிவு எண் காரண தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ளதை கவனத்தில் கொள்ளாமல் மனுதாரா் மேல்முறையீட்டில் காலதாமதத்தை எற்படுத்தவேண்டி மனுக்கு மேல் மனுவை தாக்கல் செய்துவருகின்றாா் என்றும், மேல்முறையீட்டாா் தரப்பு வழக்கறிஞா் வாதுரை செய்துள்ளாா். எதிா்மனுதாரா் தரப்பில் வாதுரைக்காக பல வாய்தாக்கள் கொடுக்கப்பட்டுள்ளது. சங்க பதிவு சட்டம் எவ்வகையிலும் இவ்வழக்கிற்கு பொருந்தாது. மேற்படி சட்டம் சங்க உறுப்பினா்களுக்கிடையே எழும்

பிரச்சனைகளுகோ, அல்லது சங்க சொத்துக்களில் எழும் பிரச்சனைகளுக்கோ தான் பொருந்தும். தாவா சொத்து ஆதியில் சங்கத்திற்கு சொந்தமான சொத்து ஆகும். மனுதாரர் வாதி மற்றும் தாவா சொத்தின் நிலை ஆகியவைகளை தெளிவாக ஒப்புக்கொண்டுள்ள நிலையில் தற்போது அவைகளை பற்றி கேள்வி கேட்கப்பட்டுள்ளது. வழக்குரையை மட்டுமே நிராகரிக்க முடியும் மேல்முறையீட்டை நிராகரிக்க இயலாது. ஆட்சேபணைகளை விசாரணை நீதிமன்றத்தில் வழக்கெழுவினாக்கள் வனைவு செய்யப்படுவதற்கு முன்பே தெரிவிக்க வேண்டும். எனவே, இம்மனுவை எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென கோரப்பட்டுள்ளது.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில்

இம்மனு அனுமதிக்ககூடியதா? இல்லையா? என்பதேயாகும்.

.

5) ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியங்கள் இல்லை. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 மற்றும் ம.சாஆ.2 ஆகிய சான்றாவணங்களும், எதிர்மனுதாரர் தரப்பில் எ.சா.ஆ.1 மற்றும் எ.சா.ஆ.2 ஆகிய சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

6) இம்மனுவின் மனுதாரர், மேல்முறையீட்டில் 4ம் எதிர்மேல்முறையீட்டாளர், அசல் வழக்கில் 4ம் பிரதிவாதி. அவர் வழக்கறிஞராக உள்ளதால், அவராகவே, இம்மேல்முறையீட்டில் ஆஜராகியுள்ளார். எதிர்மனுதாரர், இம் மேல்முறையீட்டில் மேல்முறையீட்டாளர், அசல் வழக்கில் வாதி. இம்மனுவில் தரப்பினர்களை அழைப்பதற்கு வசதியாக இம்மனுவில் உள்ளபடியே, பின்னிட்ட அழைக்கப்படுகிறார்கள்.

7) மனு மற்றும் இவ்வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்த வகையில், எதிர்மனுதாரரால் விழுப்புரம், 2வது கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.105/2000 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, இருதரப்பு விசாரணைக்கு பின்பு தீர்ப்பளிக்கப்பட்டுள்ள நிலையில், மேற்படி தீர்ப்பின் பேரில் மேல்முறையீடு எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேல்முறையீட்டில், மனுதாரரால் re-open செய்ய கோரியும், கமிஷனர்

நியமனம் கோரியும் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் ஐ.ஏ.2/2020 மற்றும் 3/2020 ஆகவும், மேலும் மனுதாரரால் சிபிசி ஆர்டர் 41 ரூல் 27-கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு, ஐ.ஏ.5/2020 ஆகவும் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, மேற்கணட மனுக்கள் நிலுவையில் உள்ளன.

8) இவ்வாறான நிலையில், கற்றறிந்த மனுதாரர் தரப்பு வழக்கறிஞரால், அசல் வழக்கு தமிழ்நாடு மின்சார வாரிய பணியாளர்கள் கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தின் சார்பாக அதன் தலைவர் என்ற கோதாவில் பன்னீர்செல்வம் என்பவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், ஆனால், அதே பன்னீர்செல்வம், தற்போது அச்சங்கத்தின் அப்போதைய தலைவர் என்ற கோதாவில் மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளதாகவும், ஆனால் அந்த சங்கம் ஏற்கனவே ம.சா.ஆ.1ன்படி கலைக்கப்பட்டுவிட்டது என்றும், மேலும் ம.சா.ஆ.2 படி, மேற்படி சங்கம் ரத்து செய்யப்பட்டுவிட்டது என்றும், இவைகளை எதிர்மனுதாரரே ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், மேற்படி பன்னீர்செல்வம் என்பவருக்கு மேல்முறையீட்டு தாக்கல் செய்ய, மேற்படி சங்கம் அங்கீகாரம் அளித்ததற்கான ஆவணம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், அங்கீகாரம் அளித்ததுபோல் மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ள நிலையில், மேற்படி பன்னீர்செல்வத்திற்கு இம்மேல்முறையீட்டை தாக்கல் செய்ய உரிமை இல்லை என்றும், எனவே மேல்முறையீட்டை விசாரணை ஏதுமின்றி, நீக்கரவு செய்யவேண்டுமென்று வாதிடப்பட்டது.

9) ஆனால், இதற்கு எதிர்மனுதாரர்/.மேல்முறையீட்டாளர் தரப்பில், விசாரணை நீதிமன்றத்தில், மேற்படி சங்கத்தின் பதிவு எண் Cause title -ல் சொல்லப்பட்டுள்ளது என்றும், மேலும், வழக்கைதான் நிராகரிக்க சிபிசியில் இடம் உள்ளது என்றும், அந்த வகையில், மேல்முறையீட்டை நீக்கரவு செய்ய இயலாது என்றும், மனுதாரர்/பிரதிவாதி பொது சந்தில் கட்டிடம் கட்டி ஆக்கிரமித்துள்ளதால், ஆக்கிரமிப்பை அகற்ற வழக்கு தாக்கல் செய்துளளதாவும், தாவா இடம் சங்கத்தின் இடம் என்பதால், பொது நோக்கத்திற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும், எ.ம.சா.ஆ.1ன்படி பன்னீர்செல்வம் தாவா சங்கத்தின் அப்போதைய தலைவர் என்று தெரியவருகிறது என்றும், அதனால் மேல்முறையீட்டை ஆட்சேபிக்க, மனுதாரருக்கு உரிமை இல்லை என்றும், எனவே மனுவை

தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

10) இவ்வாறான நிலையில், ஆவணங்களை பரிசீலனை செய்த வகையில், மனுதாரர் சொல்வதைபோல் மேல்முறையீட்டை நிராகரிக்க இயலுமா? என்பதை தான் தீர்வு காணவேண்டியுள்ளது. அந்த வகையில், இந்த மேல்முறையீட்டை பொருத்து, இரு தரப்பிலும் சொல்லும் மற்ற கட்சிகளை பொருத்து, இம்மனுவில் தீர்மானிக்க் இயலாது. மேல் முறையீட்டில் தான் தீர்மானிக்க இயலும்.

11) இவ்வாறான நிலையில், அ.வ.எண்.105/2000 வழக்கு தமிழ்நாடு மின்சார வாரிய பணியாளர்கள் கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தின் சார்பாக, அதன் தலைவர் என்ற கோதாவில் பன்னீர்செல்வம் என்பவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால், அதே பன்னீர்செல்வம் என்பவரால், தற்போது அச்சங்கத்தின் அப்போதைய தலைவர் என்ற கோதாவில் இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

12) இவ்வாறான நிலையில், ம.சா.ஆ.1ஐ பரிசீலித்த வகையில், மனுதாரர் தகவல் அறியும் சட்டம் மூலம் பெறப்பட்ட கூட்டுறவு வீட்டு வசதி துறையின் கூட்டுறவு சார் பதிவாளர், கடலூர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது. மேலும் அதை பரிசீலித்த வகையில் 1983 ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்க சட்டப்பிரிவு 137(2)(பி)-ன்படி பிறப்பிக்கப்பட்ட கலைப்பாணை என்றும், அதை துணை பதிவாளர், கடலூர் திரு.வி.ஜெயபாலன் அவர்கள் 11.06.2010ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவாக உள்ளது. மேற்படி ஆவணத்தை பரிசீலித்த வகையில், மேற்படி பிரிவின்படி, விழுப்புரம் மின்வாரிய பணியாளர்கள் கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் செயல்பாடுகள் கலைக்கப்பட்டதாகத் தான் சொல்லப்பட்டுள்ளது.

13) மேலும், ம.சா.ஆ.2ஐ பரிசீலித்த வகையில், மனுதாரர் தகவல் அறியும் சட்டம் மூலம் பெறப்பட்ட கூட்டுறவு வீட்டு வசதி துறையின் கூட்டுறவு சார் பதிவாளர், கடலூர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது. அதை பரிசீலித்த வகையில், விழுப்புரம் மின்வாரிய பணியாளர்கள் கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் 11.06.2010ல் ரத்து செய்யப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது. மேலும், எ.ம.சா.ஆ.1ஐ பரிசீலித்த வகையில், ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2ல் தாவா சங்கம் கலைக்கப்பட்டதாக சொல்லப்பட்டதற்கு முன்பு ஏற்பட்ட ஆவணமாக உள்ளது.

14) இருந்தபோதிலும், எதிர்மனுதாரர் தரப்பில் வாதிடுவது போல், பொதுவாக, மேல்முறையீட்டை நிராகரிக்க சிபிசி ஆர்டர் 41ல் சொல்லப்பட்டுள்ளதாக தெரிய வரவில்லை. ஆனால் வழக்குரையை நிராகரிக்க தான், சிபிசி ஆர்டர் 7 ரூல் 11ல் சொல்லப்பட்டுள்ளது. எனவே, ஒரு மேல்முறையீட்டை எந்த காரணங்களுக்காவும் நிராகரிக்க வேண்டுமென்று கேட்க இயலாது என்று தான் தெரிய வருகிறது.

15) இவ்வாறான நிலையில், மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆர்டர் 3 ரூல் 1 மற்றும் 2 சிபிசியிலும் மேல்முறையீட்டை நிராகரிக்கலாம் என்று சொல்லப்படவில்லை. மேலும் பிரிவு 20 கம்பெனி சட்டத்தின் படியும் இம்மேல்முறையீட்டை நிராகரிக்க இயலாது. எனவே, மனுதாரரால், அவர் கோரும் பரிகாரத்திற்கு உண்டான சட்டப்பிரிவின் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்படவில்லை. தவறான சட்டப்பிரிவின் கீழ் ஒரு மனு தாக்கல் செய்யப்படுகிறது என்பதற்காக அந்த மனுவை தள்ளுபடி செய்யக்கூடாது என்றாலும், இம்மனுவில் மனுதாரர் கோரும் பரிகாரத்திற்கு சட்டப்பிரிவே இல்லாத நிலையில், தவறான சட்டப்பிரிவின் கீழ் இம்மனுவை தாக்கல் செய்திருப்பது ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லை.

16) மேலும், உபய தரப்பினர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அவணங்களில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை பொருத்து, மேற்படி ஆவணங்கள் மேல்முறையீட்டில், தாக்கல் செய்யப்படும் பட்சத்தில், அதற்குண்டான வாய்மொழி சாட்சியங்களின் அடிப்படையில் மேற்படி ஆவணங்களில் சொல்லப்பட்ட சங்கதிகளை பொருத்து தீர்மானிக்க இயலும்.

17) எனவே, நாம் மேலே ஆரய்ந்த வகையிலும், மேல்முறையீட்டை நிராகரிக்க இயலாது என்று தீர்வு கண்டுள்ள நிலையிலும், மனுதாரர் மனுவில் கோரியுள்ள சங்கதிகளை பொருத்து, மேல்முறையீட்டில் தான் தீர்வு காண இயலும் என்ற நிலையிலும், மனுதாரர் இம்மனுவில் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கதத்தது இல்லை என்றும், மனுவின் தன்மையை கருத்தில் கொண்டு அவரவரர்கள் செலவு தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்த பின்னர் 2021ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 14ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

/ஒம்/எம்.செங்கமலச்செல்வன்
கூடுதல் மாவட்ட நீதிபதி,
( விரைவு நீதிமன்றம் )
விழுப்புரம்.

**<u>மனுதாரர், எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி</u>** = இல்லை

**<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>** =.

ம.சா.ஆ.1 - சங்கம் கலைக்கப்பட்ட கலைப்பாணையின் நகல்
ம.சா.ஆ.2 11.06.2010 சங்கம் ரத்து செய்யப்பட்டதற்கான நகல்

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>** =.

எ.சா.ஆ.1 - கிரையப்பத்திரத்தின் ஜெராக்ஸ் நகல்
எ.சா.ஆ.2 - வீட்டு வரி ரசீது

/ஒம்/எம்.செங்கமலச்செல்வன்
கூடுதல் மாவட்ட நீதிபதி,
( விரைவு நீதிமன்றம் )
விழுப்புரம்.